# சார்பு நீதிமன்றம், அவிநாசி

## OS – 135/2020

நாள்: 20.08.2025

DW1 – சுப்பராயன்

த/பெ – லேட். ஆறுமுத்தாக் கவுண்டர்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th day of August 2025.)**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. 7ம் பிரதிவாதி சந்திரகுமார் எனது மகன் என்றால் சரிதான். வாதியின் தாத்தா பெயர் ரங்கசாமி கவுண்டர் என்றால் சரிதான். அந்த ரங்கசாமி கவுண்டரும் அவரது மகன் பழனிச்சாமி கவுண்டரும் பூர்வீகமாக சர்க்கார் பெரியம்பாளையத்தில் தான் வசித்து வந்தார்கள் என்றால் சரிதான். பழனிச்சாமி கவுண்டரின் மனைவி பெயர் பொன்னம்மாள் என்றால் தெரியாது. பொன்னாம்மாள் தான் பழனிச்சாமி கவுண்டரின் மனைவி என்று எனக்கு நன்கு தெரிந்திருந்தும் இந்த வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் மண்ணரை கிராமத்தில் ஊராட்சி தலைவராக 1970–ம் ஆண்டில் இருந்தேன். நான் ஊராட்சி தலைவராக 9 ஆண்டுகள் இருந்தேன். எனக்கு தாவா சொத்து அமைந்துள்ள சர்க்கார் பெரியம்பாளையம் கிராமத்திலும் பூமி உள்ளது. அதேபோல், மண்ணரை கிராமத்திலும் எனக்கு பூமி உள்ளது. நான் ரியல் எஸ்டேட் தொழிலும் செய்து வந்தேன். அதனால் எனக்கு பத்திர பதிவு சம்மந்தமான விவரங்கள் தெரியும் என்றால் சரிதான். எனது பள்ளி கட்டிடத்திற்கு கிழக்கு புறத்தியில் தான் இந்த வழக்கு சொத்து உள்ளது. பழனிச்சாமிகவுண்டர் பெயரில் உள்ள இறப்பு

சான்றிதழை ஊத்துக்குளி சார்பதிவாளர் அலுவலகத்தில் தேடிப்பார்த்து கிடைக்கவில்லை. அவ்வாறு சார்பதிவாளர் அலுவலகத்தில் மனு கொடுத்து தேடி பார்த்தேன் என்பது சம்மந்தமான ஆவணங்கள் எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள உயில் சாசனம் எப்போது அமுலுக்கு வந்தது என்றால் 03.11.2005–ம் தேதியிலேயே அமுலுக்கு வந்தது. நான் விவசாய தொழிலும் செய்து வருகிறேன். வாதியின் தகப்பனார் பழனிச்சாமி கவுண்டர் வா.சா.ஆ.1–ல் கண்ட 21.08.2007–ம் தேதியில் இறந்துபோனதை மறுக்க எனக்கு உரிமையில்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால், தாவா சொத்தில் வாதிக்கு சட்டப்படி பாகப்பாத்திய உரிமை உள்ளது என்றும், இந்த நிலையில் வாதி தாவாவில் கோரியபடி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR
Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.08.20 16:45:35 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**